

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (28.11.2025) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் 2,100 சதுர அடி பரப்பளவில் காத்திருப்போர் கூடம் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, சிகிச்சை பெறும் மருத்துவ பயனாளிகளிடம் நலம் விசாரித்தார். இந்நிகழ்வில் மண்டலக்குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, இணை இயக்குநர் மரு.மலர்விழி, கண்காணிப்பு பொறியாளர் கார்த்திகேயன், செயற்பொறியாளர் அழகிரிசாமி, முதன்மை மருத்துவ அலுவலர் மரு.தணிகாசலம், மாமன்ற உறுப்பினர் மோகன்குமார் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கட்சிப் பாகுபாடின்றி — அரசின் நலத் திட்டங்களை

# முதலமைச்சர் என் தொகுதிக்கு நிறைய செய்திருக்கிறார்!

## நெல்லையில் — பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் பேட்டி!



நெல்லை, நவ.29-

தமிழ்நாடு அரசின் திட்டங்கள் அனைத்து தொகுதிகளுக்கும் கிடைக்கின்றன — என பா.ஜ.க. மாநிலத்தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தன்னுடைய நெல்லை தொகுதிக்கு மேம்பாலங்கள், சாலைகள், கல்லூரிகள் என பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் நிறைவேற்றி தந்துள்ளதாக கூறினார். கட்சி பாகுபாடின்றி அரசின் நலத்திட்டங்கள் அனைத்து தொகுதிகளுக்கும் கிடைப்பதாக அவர் தெரிவித்தார்.

மேலும் அவர், "இந்த ஆண்டுபொங்கல்திருநாளுக்கு பொதுமக்களுக்கு அரசு ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும். முதல்வர் இதனைச் செய்து கொடுப்பார் என நினைக்கிறேன். எனது தொகுதிக்கு பல்வேறு திட்டங்களை முதல்வர் நிறைவேற்றித் தந்துள்ளார்" என்றும் தெரிவித்தார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! பி.செந்தில்குமார்தலைமை! துறைமுகம் கிழக்கு பகுதியில்

# அன்னை தயாளு அம்மாள் தொண்டு நிறுவனத்தில் நல உதவிகள்!

## ஆ.ராசா எம்.பி, அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, வைகை புயல் வடிவேலு வழங்குகின்றனர்!

சென்னை, நவ.29-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில், துறைமுகம் கிழக்கு பகுதியில், மனித நேய உதயநாளை முன்னிட்டு "உதயம் - 14", கொடுக்க பிறந்த கரம்! உதயம் திராவிட வரம்!! எனும் தலைப்பில், 29/11/2025 சனிக்கிழமை இன்று மாலை 3 மணியளவில், சென்னை, பிராட்வே, டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் நடை பெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவில், சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி, துறைமுகம் கிழக்கு பகுதி அமைப்பாளர் பி. செந்தில் குமார் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர் பாபு, எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, இரா.நரேந்திரன், வானவில்விஜய், பா. ஜெகதீஷ், ஜி.எம்.தேவன், இசட்.ஆசாத் எம்.சி, ப.ஸ்ரீராமுலு எம்.பி, எம். விஜயகுமார், என்.பி.எம். சேக்அப்துல்லா, எம்.இப்ராஹிம்கனி, இரா.கலைச்செல்வி, எல்.நவீன் எம்.சி, பா. பிரதீப்குமார், நா.ரஞ்சித்விஜயாலயன், எல்.சம்பத்குமார், பி.விஜயககுமார், எம்.வினாயகம், பா.ஜெகதீஷ். முன்னிலை வகிக்கின்றனர்.

நா.மோகன், விஷ்ணு சக்கரவர்த்தி அ.சுமன்ராஜ், க.பாலாஜி, டி.பிலிப்ஸ், எஸ்.இம்ரான்கான், எஸ்வினோத்குமார், வி.எல்.யஸ்வந்த், அ.திருப்பதி, அ. ஆனந்த், எம்.சண்முகசுந்தரம், பா.அஜித்குமார், கே.ஆர்.மணிரத்தினம், எம். தமிழ்வாணன், எம்.பரத்குமார், த.கதிரவன்(எ)ராஜா, எஸ். புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், ஆ.நா.பார்த்திபன், மா.ஜெய்சங்கர், ஆர்.ரவிச்சந்திரன், பா.கதிரவன், டி. சதீஷ்குமார், சேப்பாக்கம் வே.பிரபாகரன், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தான லட்சமி, ப.ஜெயராமன், கே. ஆர்.அபரஞ்சி, மே.ஜனார்த்தனன், ம.முத்துக்குமார், ஜெ.பாலமுருகன், ஜி.ஜெ. பிரபு, எஸ்.தனசேகர், R.D. சங்கர்நானா, க.வினோத் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் நலத்திட்டம் வழங்கும் விழாவில் கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, வைகை புயல் வடிவேலு ஆகியோர்

அன்னை தயாளு அம்மாள் தொண்டு நிறுவனத்தில் பயிற்சி பெற்ற 183 மகளிருக்கு தையல் இயந்திரம், 291 மாணவ-மாணவியருக்கு மடிக்கணினி, 500 கழக மகளிர்களுக்கு சுழல் நிதி மற்றும் பரிசு பொருட்கள் வழங்கி சிறப்புரை யாற்றுகின்றனர்.

மேலும் இந்நலத்திட்ட வழங்கும் விழாவில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், தயாநிதிமாறன் எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம். எல்.ஏ, ப.ரங்கநாதன் Ex. MLA, வெ.பரிமளம் எம்.சி, ராஜேஷ்ஜெயின் எம்.சி, T. சுபாஷ்சந்திரபோஸ் P.G.சுகுமார் V.சங்கர் M.சுரேஷ் S. கதிர்வேலு R.தங்கமணி A.மதுசூதனன் P.சகாயராஜ் சேகர், பிரஸ்சேகர், ஹாஜி முகமதுஅலி பீ.கே.சம்பத் T.S.சேகர் எழில்அரசு க.முருகன் G.மாசிலாமணி M.V.R. சரவணக்குமார் M.நாராயணன் V.M.முருகவேல் V. அசோக்குமார், K.உ.மதன், A.P.S.செந்தில்குமார், S.உதயஆதவன் கே.ராஜி எம். புகாரிகண்ணன், அ.ஆதாம் கிஷோர் எஸ்.ஜெகன்நாதன் ஆர்.பி.ரமேஷ், எச்.சீமாபஷிர் டி.சேகர் ஏ.வி.சுரேஷ் கே.ஒ.டி.கலீல் எ.தேவந்திரன் பாரி ஜெ.மணிவண்ணன் ஆர்.மாரி எஸ்.சாந்திலால் பி.கர்ணா பி. மோகன்லால் ஜெயின் ராம் பிரசாத், வி.ஜெ.திலிப்ராஜ் டி.முல்லைசெல்வன் இ.ஜெய்சங்கர் உசேன் லூகாஸ் எஸ்.பாபு டி. ரமேஷ் எம்.துரை கே.ஸ்ரீதர் எஸ்.ஷவேல் சுதாகர் ரா. ரஞ்சித்குமார் எம்.இருதயராஜ், சி.தனசேகர், எஸ். அசோக்ஜெயின் ஜி. வெங்கடேஸ்வரன், சரவணன், ஜெ.சிவகுமார், எம்.துரை சி.ராதிகா கே.சாந்தி அன்னக்கிளி ஆர்.அனிதா எம். எழிலரசி தேன்மொழி காயத்திரி செல்வி வளர்மதி, எ.சுசிலா, கே.தமிழ்செல்வி, ர. வேலாயுதம் கே.கோவிந்தன் நடராஜன் டீ. சிலம்பரசன் த.தமிழ்அரசு G.மோகனசுந்தரம் த.ஜெயசூரியா, கே.டி.ஹேமந்த்குமார், உ.ராஜேஷ் ஊ. லோகேஷ் P.லோகேஷ் P. கார்த்திக், M.அபிஷேக் S.முகேஷ் சிவக்குமார் குரேஷ் மணிமேகலை V.கவிதா V.நந்தினி Kஉநந்தினி சி.ஜெயமேரி கே.அம்சவள்ளி எம்.தெரசா பி. கலைட்சுமி ஆர்.செல்வி எஸ்.தயாரி V.துர்கா எஸ். சாமந்தி .கன்னியம்மாள் எம்.மகாலட்சுமி வி.அப்பயம்மாள் எ.மலர் ஏ.சுமதி பி. பார்வதி எம்.ராணி எம்.முத் தமிழ்செல்வி ச.திலகம் வி.அலமேலு கே.நல்லமுத்து கோ.சித்ரா டி.சாந்தி ராஜமீனா எஸ்.முருகம்மாள் மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வட்ட கழக செயலாளர் ராஜா (எ)கதிரவன்,எம். பரத்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



இளைஞர் எழுச்சி நாள் முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் நகரத்தில் நகர மன்ற தலைவர் உதய மலர் பொன் பாண்டியன், ஏற்பாட்டில், தலைமை செயற்குழு உறுப்பினர் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், பொது மக்களுக்கு அறுசுவை உணவு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், மற்றும் எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், தா. மோதிலால், தி.ஆ.கமலக்கண்ணன், டி.எம்.ரவி, ராஜேஷ்வரி கைலாசம், டி.என்.ஆர்.சீனிவாசன், இ. குப்பன், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 147 வது வட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு வட்டச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தலைமையில் வார்டு மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். உடன் க.பிருந்தாவனம், ஜி.குப்புசாமி, எஸ்.ஜி.வெங்கடேசன், பி.கோபிநாத், ஜி.பி. ஆனந்தகுமார், எஸ்.முருகன், தமயந்தி, இளங்கோவன், புருஷோத்தமன், பொன்.பச்சையப்பன், சௌந்தர்யா சேகர், ஜெகன், சிவா, நாகேந்திரன் காளிதாசன், அருண், பி.மணி, ஐ.அன்பு, குருநாதன், அரவிந்தன், பிரபு தாஸ், ஜே.கே.கோபி, சரவணன் அஸ்வின், கட்டிங் மணி, எஸ்.முருகன் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.







கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பெரும்புதூர் நகர தி.மு.க. சார்பில் நகரச் செயலாளர் இரா.சதிஷ் குமார் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கழகப் பொருளாளரும், மக்களவைக் குழு தலைவருமான டி.ஆர்.பாலு கலந்துக்கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ., ஒன்றியச் செயலாளர்கள் படப்பை ஆ.மனோகரன், ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, இ.மணி, கோ.சத்தியமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### தமிழ்ச் சமுதாயத்தின் பெருமைமிகு வரலாற்றினை

# ஆய்வு மேற்கொள்ள விண்ணப்பிக்கும் தேதி நீட்டிப்பு!

## அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தகவல்!

சென்னை, நவ.29-

தமிழ்ச் சமூகத்தின் பெருமைமிகு வரலாற்றினை அனைவரும் அறிந்து கொள்ள தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் அரிய வரலாற்று ஆவணங்களை ஆராய்ந்து ஆய்வு மேற்கொள்ள ஆராய்ச்சியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான தேதி 05.12.2025 வரை நீட்டிக்கப்படுவதாக உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:

1973-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம் மாறிவரும் காலத்திற்கேற்ப மீளுருவாக்கம் செய்யப்படும் என்றும், ஆண்டுதோறும் 10 முதல் 15 ஆய்வுகள் வரை மேற்கொள்ளப்படும் என்ற முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்கத் தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம் மீளுருவாக்கம் செய்யப்பட்டது. அதன் கீழ் வரலாற்று ஆய்வுகள் மேற்கொள்ள 20 நபர்களுக்கு ஆராய்ச்சி உதவித்தொகை வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டன.

தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் அரிய ஆவணங்களை ஆராய்ந்து தமிழ்நாட்டின் பெருமைமிகு வரலாற்றினை வெளிக்கொண்டு வரும் வகையிலான ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு முதுகலைப் பட்டதாரிகள் அல்லது தனிநபர் ஆராய்ச்சியாளர்கள் WWW.TAMILNADUARCHIVES.TN.GOV.IN என்கிற இணையதளத்தில் விண்ணப்பங்கள் இணைய வழியில் விண்ணப்பிக்க 17.11.2025 முதல் 28.11.2025 வரை தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆய்வு மேற்கொள்வதற்காக விண்ணப்பித்த ஆராய்ச்சியாளர்களின் விண்ணப்பப் படிவத்தினை முழுமையாகப் பூர்த்தி செய்து தேவையான ஆவணங்களை இணைய வழியில் பதிவேற்றம் செய்வதற்கான கால அவகாசம் 05.12.2025 வரை நீட்டிக்கப்படுகிறது.

தகுதியுள்ள ஆராய்ச்சியாளர்கள் தங்களது விண்ணப்பங்களை இணையவழியில் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் 05.12.2025 வரை விண்ணப்பித்துப் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். விண்ணப்பங்கள் இணைய வழியில் மட்டுமே பெறப்படும்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### மா. கடும்பாடி ஏற்பாடு! காஞ்சி வடக்கு திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றிய நென்மேலி ஊராட்சியில்

# இளைஞர் எழுச்சி நாள்: 50க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்!

## ஒன்றிய இளைஞரணி – மாணவரணி சார்பில் ரத்ததான முகாம்! அறுசுவை உணவு வழங்கப்பட்டது!

சென்னை, நவ.29-

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் - இளைஞர் எழுச்சி நாள் விழா செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றிய நென்மேலி ஊராட்சியில் காஞ்சி வடக்கு மாவட்ட திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றிய இளைஞரணி மற்றும் மாணவரணி சார்பில் திருக்கழுக்குன்றம் ஒன்றிய கவுன்சிலர், வடக்கு ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் மா. கடும்பாடி ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சேட்டு (எ) பரந்தாமன் வரவேற்றார். முன்னாள் எம் எல்.ஏ.வும் தி.மு.க. தலைமை பொது குழு உறுப்பினரும் வடக்கு ஒன்றிய செயலருமான வீ. தமிழ்மணி கலந்து கொண்டு இரத்ததான முகாமை துவக்கி வைத்து ஏழை எளிய மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. தொடர்ந்து, த.வெ.க. அ.தி.மு.க., பா.ம.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் இருந்து 50 க்கும் மேற்பட்டோர் திமுகவில் ஒன்றிய செயலாளர் தமிழ்மணி முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் எஸ்.ஏ. பச்சையப்பன், வரதராஜ பெருமாள், பூபாலன் காந்தி, பெருமாள், செல்லப்பன், டில்லி, ராஜேஷ், சதீஷ்குமார், இளங்கோ, பன்னீர் செல்வம், சஞ்சய், சரவணன், கார்த்திக், ஜீவா, திலகவதி, வினோத் குமார், சந்தோஷ், கோவிந்தராஜ், விநாயகமூர்த்தி, மதுரை குமார், சண்முகசுந்தரம், டில்லி பாபு, தினேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இறுதியில் தினேஷ், செல்வம், தினேஷ்குமார் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் நன்றியுரை ஆற்றினர்.

# மலேசியா தளபதி பேரவை சார்பில் இளைஞர் எழுச்சி நாள்!

கோலாம்பூர், நவ. 29

கழக இளைஞரணி செயலாளர். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு. மலேசியா தளபதி பேரவை சார்பாக. ஜொகூர்பாரில். முகமது இக்பால் தலைமையில். துப்புரவு தொழிலாளர்களுக்கு. மதிய உணவு வழங்கப்பட்டது. நிகழ்வில். முருகன். மாரிமுத்து. செல்லப்பா. ஏராளமான உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர். அதைத்தொடர்ந்து. தைப்பிங்பாகன்சிராயில். செயலாளர்.ஹச்எம்.ஜெய்னுதீன். பொருளாளர்.ஜே. சிவானந்தம். தொழிலதிபர். என்.ஏ.பி.சலீம். இவர்கள் தலைமையில். காலை உணவு. முதியோர் இல்லத்திலும். மதிய உணவு. துப்புரவு தொழிலாளர்களுக்கும். இனிப்புகள் வழங்கப்பட்டது.

நிகழ்வில். திருமலை ராஜபுரம். அந்தோனி. சதீஷ்குமார். சாதிக் பாட்ஷா. முபாரக் உசேன். அயூப் கான். சின்னப்பன். பஷீர் அகமது. ராம்குமார். குமரன். மணிகண்டன். ஜாபர் அலி. ராகவன். மகளிர் அணி சார்ந்த. வைதேகி. பானுப்பிரியா. குர்ஷித். இளைஞர் அணியினர். மற்றும் ஏராளமான உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர். மலேசியா முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

# மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் தொண்டர் அணியின் தஞ்சை வடக்கு மாவட்டம் - கும்பகோணம் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

## தஞ்சை வடக்கு மாவட்டம்

### கும்பகோணம் மாநகரம்

தலைவர் – எஸ். ராஜேஸ்வரி, 32ஏ, சுவாமிமலை மெயின் ரோடு, யானையடி, மேலக்காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணைத் தலைவர் – எஸ். ரஞ்சிதா, 12பி/2, மாரியம்மன் கோவில் தெரு, மாதுளம்பேட்டை, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

அமைப்பாளர் – கா. பானுமதி, பெருமாண்டி நடுத் தெரு, மேலக்காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) கே. சினேகா 31/5, தெற்கு வள்ளுவர் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 2) த. ஞானமணி 9/6, எம்.ஜி.ஆர். நகர், வெங்கட்ராமன் நகர், ரயில்வே புது ரோடு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3) ச. அருணாதேவி 2/9, மூர்த்தி தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 4) ஜி. சத்யா 185/36, காந்தியடிகள் சாலை, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 5) வி. ஜெயந்தி 21ஏ, சாரங்கபாணி தெற்கு தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 6) கு. பூசம்மாள் 64ஏ, பைராகித் தோப்பு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 7) எம். சிந்து 19, ஆணைக்காரன்பாளையம், புதுத் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 27-11-2025.

**நாமக்கல் ப.இராணி,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி





கழக இளைஞரணி செயலாளர் – துணை முதலமைச்சர் இளந் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட அரசு மருத்துவமனையில் நவம்பர் 27 அன்று பிறந்த 10 குழந்தைகளுக்கு மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ தனது சொந்த செலவில் தங்க மோதிரம் அணிவித்தார் மேலும் குழந்தைகளுக்கு பயன்படும் பொருள்கள் கொண்ட பெட்டகம் பழ கூடை ரொட்டி போன்ற நல திட்ட உதவிகளும் வழங்கி மகப்பேறு வார்டில் இருந்த அனைத்து தாய்மார்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார் அப்பொழுது மருத்துவமனை தலைமை மருத்துவர் பழனிவேல் பகுதி கழக வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.